முருகப்பெருமான் துணை

**மகான் திருமூலதேவர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**04.03.2024,** திங்கட்கிழமை

1. பாமரர்க்கும் ஞானம் அருள
பாலமுருகன் மகா சக்தியாக
நேமமுடன் அவதாரம் கொண்ட
ஞானியே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் சோபகிருது சால்திங்கள்
வரங்களென மூவேழு திகதி சோமவாரம்
(சோபகிருது வருடம் மாசி மாதம் 21 ம் நாள், 04.03.2024, திங்கட்கிழமை)
வழங்குவேன் துல்லிய ஆசி
3. ஆசிதனை திருமூலதேவர் யானும்
அகிலம் பாதுகாப்புற உரைப்பேன்
பூசனையும் தரும பலமுமே
புகலுவேன் அரங்கன் மக்களிடை
4. மக்களிடை நிலைக்கும்படி அருளி
மாதவ தருமமாக உடனிருக்க
ஆக்கமுடன் உலகினில் மக்களுக்கு
அரங்கனால் நன்மை சேரும்
5. சேருமே பெரும் பாதுகாப்பு
செப்பிட சாதிமத இன பாகுபாடு
வருங்காலம் தொடரா விலகி
வாஞ்சையுடன் சமத்துவ சமதர்ம
6. சமதர்ம வள்ளல் நெறி பரவி
சர்வமும் தெய்வ பலமென
நேமமுடன் ஆற்றல் கூடி
நிலவுலகில் பாதுகாப்பு காணும்
7. காணவே அரங்கன் உபதேசம்
கலியினில் கல்விகேள்வி ஞானம்
ஞானமாகப் பரவி சிறந்து
ஞாலமதில் தேற்றம் தரும்

8. தருகவே மனித படைப்பில்
தானென்ற கர்வம் விலகி
தரும சிந்தை தயவே வடிவாகி
தன்னலம் கருதா நிலை கடந்து

9. கடந்துமே உலக சேமத்தில்
கடமை ஆற்றுபவர்களாகத் தேறி
தடையற அரங்கன் உருவாக்கும்
தரும ஞானப் படைகளாகத் தேறி

10. தேறியே அரங்கன் தேடுகின்ற
தேர்தல் ஆன்மீக அரசியல்
அறிவுக் களம் மக்களும் உணர்ந்து
அச்சமற இறங்கி களப்பணி

11. களப்பணி உலகினில் ஆற்றி
கட்டாயம் உலகமாற்றம் புரிவர்
வளம்பெற ஞான ஆட்சி படைப்பர்
வழங்கிய துல்லிய ஆசி முற்றே

—சுபம்—